REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 251

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: பங்குனி 21உ சனி (3—4—54) ★ ★ ★ வெளியீடு: பங்குனி 22உ ஞாயிறு (4—4—54)

திராவிடத்திற்கு எதிராக சிலோன் பொருளாதார நடவடிக்கை!

—(:)—

30 லட்ச ரூ. வெங்காய இறக்குமதிக்குத் தடை!

—(:)—

பம்பாய், வங்காளம், எகிப்து சரக்குகளுக்குச் சலுகை!

—(:)—

உள்நாட்டிலேயே உற்பத்தி ஆவதாகப் பசப்பல்

கொழும்பு, ஏப்ரல் 2—

பல ஆண்டுகளாக, இலங்கைக்கு வேண்டிய சிவப்பு வெங்காயம் முழுவதையும் தென்னாடுதான் ஏற்றுமதி செய்து வந்தது; ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த வெங்காயத்தின் மதிப்பு ரூ. 30 லட்சமாகும்.

இந்த சிவப்பு வெங்காய இறக்குமதியை, இம்மாதத்திலிருந்து பூரணமாகத் தடை செய்து விடுவதென்று இலங்கை சர்க்கார் முடிவு செய்து விட்டது; ஆனால், பம்பாய், வங்காளம், எகிப்து, மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் வெங்காயத்துக்குத் தடை எதுவும் கிடையாதாம்!

உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டத்தின் கீழ், இலங்கை சர்க்கார், சிவப்பு வெங்காயத்தை, தீவின் வட ஜில்லாக்களில் அதிக அளவில் பயிரிட்டு, சுயதேவையைப் பூர்த்தி செய்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

பேட்டியளிக்க மறுப்பு

கொழும்பு, ஏப். 1—

தற்காலிக பர்மிட்டுகள் அடையாளச் சீட்டுகள் புதுப்பிப்பதை நிறுத்துவதென்று சர்க்கார் செய்துள்ள முடிவைப் பற்றி விவாதிப்பதற்காக தங்களுக்கு பேட்டியளிக்க வேண்டுமென்று இந்திய வர்த்தக சங்கத்தினால் நியமிக்கப்பட்ட அறுவர் குழு இலங்கை பிரதம மந்திரியை கேட்டதற்கு, அவர் பேட்டியளிக்க மறுத்து விட்டார்.

தூத்துக்குடி சதி வழக்கு

10-ந் தேதி தீர்ப்பு

திருநெல்வேலி, ஏப். 2—

தூத்துக்குடி தோழர்கள் கே. வி. கே. சாமி மற்றும் 79 பேர் மீது நடந்துவரும் தூத்துக்குடி சதிவழக்கு விசாரணை இன்று விசேட முதல் வகுப்பு மஜிஸ்திரேட் அரிகர அய்யர் முன்னிலையில் முடிவுற்றது. எதிர் தரப்பில், எல்லோரிடமும் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுவிட்டன. ஏப்ரல் 10-ந் தேதி தீர்ப்பு கூறப்படும்.

உயிருடன் வெந்து மாண்ட சிறுமி!

180 வீடுகள் தீக்கிரை

சேலம், ஏப். 2—

"180 ஓட்டு வீடுகளும், ஓலை வீடுகளும் தீப்பற்றி எரிந்து அடியோடு சாம்பலாகிவிட்டது; ஐந்து வயது சிறுமி ஒருவள் உயிரோடு எரிந்துவிட்டாள்; உணவுத் தானியம், நகைகள், கரன்சி நோட்டுகளுமாக சுமார் 1 லட்சம் ரூ. மதிப்புள்ள சொத்துக்கள் நாசம் ஏற்பட்டுவிட்டது; 10 மணிநேரம் போராடி தீயணைக்கும் படையினர் தீயைக் கட்டுப் படுத்தினர்.

வேதனை தரும் இச்சம்பவம் சேலம் ஓமலூர் தாலுகாவைச் சேர்ந்த மோரூர் கிராமத்தில் புதனன்று மாலை நடைபெற்றுள்ளது.

1952—53-ல், காப்பிக் கொட்டைமீது வசூலிக்கப்பட்ட மத்திய எதிர்வரி மொத்தம் 64 லட்சத்து 41 ஆயிரம் ரூபாயாகும்.

இலங்கை 'நாடற்ற தமிழர்களை' திரிசங்கு ஆக்கிற்று இந்திய சர்க்கார்

—:o:—

இலங்கை 'வெளியேறு' என்கிறது! இந்தியா 'இங்கு வராதே' என்கிறது!

—(:)—

இந்தியசர்க்கார்புதியவிபரீதப்போக்கு

புதுடில்லி ஏப். 2—

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையே பிரயாணம் செய்ய விரும்புகிறவர் விஷயத்தில், 'அனுமதிச் சீட்டு' முறையை அமுல் நடத்த இந்திய சர்க்கார் முடிவு செய்துவிட்டதாகத் தெரிகிறது.

சரியான பிரயாணச் சீட்டுகளோ அல்லது அனுமதிச் சீட்டுகளோ இல்லாமல் இலங்கைக்கும்—இந்தியாவுக்கும் நாடற்ற நபர்கள் பிரயாணம் செய்வதைத் தடுக்க இலங்கை சர்க்கார் முடிவு செய்திருப்பதை வலுப்படுத்த தற்போதுள்ள நிலைமை சாதகமாக இருக்குமென கருதப்படுகிறது.

இலங்கைக்கும்-இந்தியாவுக்கும் பிரயாணம் செய்யும் எல்லா நபர்களுக்கும் இப்புதிய முறை அனுஷ்டிக்கப்படுமாதலால், எஸ்டேட் தொழிலாளர்களுக்கு தோட்ட சூப்பிரண்டெண்டுகள் வழங்கும் அடையாளச் சீட்டுகளை வைத்துக்கொண்டு அவர்கள், இனி இந்தியாவுக்கு வர முடியாது. இப்படி வரவேண்டுமென்றால் அவர்கள், இலங்கைக்கு மறுபடியும் வர அச்சர்க்கார் அளிக்கும் தஸ்தாவேஜுகளைப் பெற்றிருக்க வேண்டும்.

எஸ்டேட் தொழிலாளர்கள் விஷயத்திலும், இலங்கை சர்க்கார் இதே முறையைப் பின்பற்றும் என்று தெரிகிறது. நிலைமை வெகு விரைவில் சிக்கலாகிவிடும். எஸ்டேட் தொழிலாளர் ஒருவர் இந்திய அனுமதிச் சீட்டு கோரினால், அவர் இலங்கைக் குடிமகனுக்கான எல்லா உரிமைகளையும் இழந்துவிடுவார்.

இப்படியிருக்கையில், இலங்கைக் குடிமகனாக விரும்பும் இந்தியர், இந்தியாவுக்கு வருவதை குறைத்துக்கொள்ள வேண்டும் என்று இலங்கை அதிகாரிகள் கூறுகின்றனர். தற்போது இலங்கைக் குடிமக்கள்—இந்தியர்கள் உள்பட—அந்நிய நாடுகளுக்கு செல்வதைத் தடுக்கும் சட்டம் இலங்கையில் இல்லை; ஆகவே, இந்தியாவைச் சேர்ந்த இலங்கைக் குடிமக்கள்மீது விசேட கட்டுப்பாடு விதிக்க எத்தகைய காரணமுமில்லை.

"இலங்கை இந்தியர்களுக்கு தற்போது சோதனை காலம் என்றே கூற வேண்டும்; அவர்கள் இந்தியக் குடிமகனாக விரும்புகின்றாரா அல்லது இலங்கையிலேயே தங்கி குடிமகனாகவோ, அல்லது நாடற்ற நபர்களாகவோ இருக்க விரும்புகின்றனரா என்று முடிவு செய்து கொள்ள வேண்டும். 'பாஸ்போர்ட்'டுக்கு அவர்கள் இந்திய

(4-ம் பக்கம் பார்க்க)

விடுமுறையிலுள்ள பிரெஞ்சிந்திய இராணுவ அதிகாரிகள் திருப்பி அழைக்கப்படுகின்றனர்

—(:)—

இணைப்பு ஆதரவாளர்கள் சுடப்பட்டதாகத் தகவல்

புதுச்சேரி, ஏப். 2—

போதமக்கள் பாதுகாப்பும் படையைப் பலப்படுத்த, விடுமுறையிலிருக்கும் இராணுவத்தைச் சேர்ந்த எல்லா அதிகாரிகளையும் சர்க்காரால், திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்.

புதுச்சேரியிலிருந்து 12 மைல் தூரத்திலுள்ள திருப்புவனம் கம்யூனைச் சேர்ந்த திருக்கானூர் கிராமத்தில், 600 பேரடங்கிய இணைப்பு ஆதரவாளர் ஊர்வலத்தினர் மீது பிரெஞ்சிந்தியப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர்; நால்வர் காயமடைந்தனர்; இருவர் படுகாயமடைந்தனர்.

எங்கேயோ மறைந்திருந்த பிரெஞ்சிந்தியப் போலீசார், திடீரெனத் தோன்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இந்தியக் குடிமக்கள் நுழையக் கூடாதாம்!

இந்தியக் குடி மக்கள் புதுச்சேரி பிரதேசத்திற்குள் வரக் கூடாதென்று பிரெஞ்சிந்திய நிர்வாகம் தடை செய்திருக்கிறதாம்!

இந்திய யூனியனிலிருந்து புதுவைக்குச் செல்ல நான்கு பிரதான பாதைகள் இருக்கின்றன. அவை, விழுப்புரம், கடலூர், திண்டிவனம், மரக்காணம் ஆகியவைகளாகும்.

'மாகியில்' நடவடிக்கை

பிரெஞ்சு 'மாகி' எல்லையில், இந்தியப் போலீஸ் நடவடிக்கைகள் கடுமையாக்கப்பட்டுள்ளது.

'பாஸ்போர்ட்' முறை அமுலாகும்?

இந்தியாவுக்கும், பிரெஞ்சு பிரதேசங்களான புதுச்சேரி, காரைக்கால் ஆகிய இடங்களுக்கு மிடையே பிரயாணம் செய்வது சம்பந்தமாக இந்திய 'பாஸ் போர்ட்' விதிகளின்படி அளிக்கப்பட்டிருந்த விதி

(4-ம் பக்கம் பார்க்க)

உத்திரப் பிரதேசத்தை இரு துண்டாக்கக் கிளர்ச்சி

நூறு சட்ட சபை உறுப்பினர்கள் கையெழுத்திட்டு மனு அளித்துள்ளனர்

லக்னோ, ஏப். 2—

உத்திர பிரதேசத்தைச் சேர்ந்த, ஆக்ரா, மீரத், ரோகில்கண்ட் பகுதிகளைத் துண்டித்துத் தனியாகப் பிரித்து மேற்கு உத்திரப் பிரதேச மாநிலமாக்க வேண்டுமென, காங்கிரஸ் கட்சியினரால் கிளர்ச்சி செய்யப்படுகிறது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி, மாநிலத் திருத்தி அமைப்புக் குழுவினிடம், மனு ஒன்று கொடுக்கப்பட்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

அம்மனுவில் மேற்கு உ. பி.யிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 125 சட்டசபை உறுப்பினர்களில் 100-க்குக் குறையாத உறுப்பினர்கள் கையொப்பமிட்டிருப்பதாக நம்பப் படுகிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 3—4—54 சனி

கொத்தலாவலை தர்பார்!

விளையும் பயிர் முளையில்! இலங்கைவாழ் தமிழர் பற்றி நேரு—கொத்தலாவலை உடன்படிக்கை ஏற்பட்ட பொழுதே, 'கொள்ளத் தக்கதல்ல, தள்ளத் தக்கதே.' எனக் கூறி இருந்தோம். அங்குள்ள தமிழர்களுக்குள்ள துன்பம் நீங்குவதற்குப் பதில், துன்பம் பெருகுவதற்கு உடன்படிக்கைத் துணை செய்யும் என எடுத்துக்காட்டி, எச்சரித்திருந்தோம்.

திருச்சியில் கூடிய நமது தி. மு. கழகத்தின் பொதுக் குழுவும், உடன்படிக்கையைக் கண்டித்து, அதை மாற்றி புதியதொரு உடன்படிக்கையை, உரிய தென்னாட்டுத் தலைவர்களைக் கொண்டு உருவாக்க முன்வர வேண்டுமென, தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியும் இருக்கிறது.

கொண்ட அச்சத்தை மெய்யாக்கி விட்டார், இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, தம் நடத்தையால்! சிலோன் குடிமக்களாக இன்னமும் அங்கு பதிவு பெறுமல், நாடோடிகளாக இருந்து வருகிற இந்தியத் தமிழ் மரபினரை, இந்திய குடிமக்களாகப் பதிவு செய்துகொள்ள, சிலோன் சர்க்கார் வேண்டிய ஊக்கத்தை மூட்டும் எனவும், அதற்கு சர்க்காரின் நிர்ப்பந்தம் எதுவும் இருக்காது எனவும், டில்லி உடன்படிக்கையில் விதி ஒன்று இருக்கிறது. அந்த ஏற்பாட்டைத் தமது கொடுமை மிக்க நடவடிக்கைக்குச் சாதகமாக்கிக் கொள்ள கொத்தலாவலை முனைந்துவிட்டார்.

இலங்கை சர்க்காரின் நியந்தனைகளுக்கு இணங்கி சிலோன் குடி உரிமை பெறும் வாய்ப்புடைய இந்தியத் தமிழ் மரபினர், குடி உரிமைக்காக மனு செய்து கொண்டுள்ளனர். இன்னும் அம்மனுக்கள் முடிவு காணப்படாமலே, காலந் தாழ்த்தப்பட்டு வருகின்றன. அத்தகையவர்களுக்கு சட்டத்திற்குட்பட்ட தற்காலிகக் குடி உரிமை சீட்டு வழங்கப்பட்டு இருந்தது. அவர்கள் இந்தியா வந்து திரும்பிச் செல்லவும் சர்க்கார் உரிமைச் சீட்டுப் பெற்றிருந்தார்கள். அங்கு வாழ்வதற்காக அளிக்கப்பட்டிருந்த தற்காலிகக் குடி உரிமை சீட்டின் ஆயுட்காலம் முடிவுற்றதும் புதுப்பிக்க முடியாது என கொத்தலாவலை கூறிவிட்டார். அத்துடன் அவர்களுக்கு இந்தியா வந்து சிலோன் திரும்ப அனுமதிச் சீட்டு அறவே அளிக்க முடியாது எனவும் அந்த கனவான் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

சிலோன் குடி உரிமை பெறுது, அக் குடி உரிமை கோரி மனு போட்டிருப்பவர்கள், அம்மனுக்களைத் தாங்களாகத் திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்தியக் குடி மக்களாகப் பதிவு செய்து கொள்ளட்டும் என்ற கெடு மதியினுல்தானே, கொத்தலாவலை இந்த அக்கிரமத்தைச் செய்யத் துணிந்துள்ளார் என்று கூறுவதற்கில்லாமல், இதற்கு வேறு என்ன கூறுவது? இந்த முறையில் கட்டாயம் தவிர வேறு என்ன இருக்கிறது? செய்து கொண்ட ஒப்பந்தம், இந்தியத் தமிழ் மரபினர் தம்மிச்சையாக இந்தியக் குடிகளாகப் பதிவு செய்து கொள்ள சிலோன் சர்க்கார் சலுகை அளிப்பதைத் தான் வரவேற்கிறதேயல்லாது, கட்டாயப்படுத்தி இந்தியக் குடிகளாக்குவதை ஆதரிக்கவில்லை.

"இரு சாராரின் நலன்களையும் பாதிக்கும் விஷயத்தில், இப்பொழுது போலவே, இரு சர்க்காரும் கலந்து பேசி முடிவு காண வேண்டும்" என்ற டில்லி ஒப்பந்தத்தின் ஒரு விதி விளக்கமாகக் கூறுகிறது. கொத்தலாவலை இந்த விதியை மறந்து விட்டிருப்பார் என்று சொல்ல முடியாது. ஒப்பந்தம் செய்து கொண்டபொழுதே, ஒப்பந்த விதிகளுக்கு மதிப்பளித்து நடக்கக்கூடாது எனக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார் என்ற உண்மையைத்தான், அவருடைய இன்றைய அக்கிரமப் போக்கு உறுதிப்படுத்துகிறது.

ஒப்பந்த விதிகளை அவர் உதறித் தள்ளி நடப்பது ஒரு பக்கம் இருக்க, முன்னுள் பிரதமர் கொடுத்த வாக்குறுதியையும் கொலை செய்வதிலேயே அவர் முனைந்திருக்கிறார். அதாவது, சிலோன் குடிமக்களாகப் பதிவு செய்துகொள்ள விரும்பாத, இலங்கை வாழ் இந்தியத் தமிழர்கள் மேற்கொண்டுள்ள தொழில்களுக்கு தடை ஏற்படுத்துவதில்லை என டான் சேனநாயகா, பண்டித நேருவிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார். அதையும் கொத்தலாவலை நிர்மூலமாக்குவதிலேயே தீவிரம் காட்டுகிறார்.

இந்திய சர்க்காரிடமிருந்து பெற்றுள்ள பிரயாண அனுமதிச் சீட்டும், சிலோன் சர்க்காரின் தற்காலிகக் குடிவாழ் உரிமைச் சீட்டும் கொண்டு இருப்பவர்களை, இந்தியக் குடிகள் எனக் கொள்வதும் பொருத்தமாறு இல்லை. இலங்கை குடியேற்ற சட்டம் 1949-ல் நடைமுறைக்கு வந்த காலை சிலோன் குடி உரிமைக்கு மனு செய்துகொண்ட இந்தியத் தமிழ் சந்ததியினருக்கு, பிரயாண வசதிக்கான ஏற்பாடு ஒன்றும் அந்தச் சட்டத்தில் ஏற்படுத்தவில்லை. அதுபற்றி அப்பொழுது கேள்வி எழுந்தது. இந்திய சர்க்கார் பிரயாண அனுமதியைப் பெற்றுக்கொள்ளும்படியும், அப்படி பெற்றுக் கொள்வதால், சிலோன் குடி மக்களாக வேண்டுமெனும் அவர்கள் கோரிக்கைக்கும் பழுதேதும் ஏற்படாது எனவும் சிலோன் சர்க்காரால் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்புக்கு எதிராக கொத்தலாவலை நடந்துகொள்ள முன்வருவது வியப்புக்குரியதாகவே இருக்கிறது.

சிலோன் சர்க்காரின் புதிய அக்கிரமக் கட்டளையினுல் பலியாகிற, சிலோனில் உள்ள இந்தியத் தமிழ் மரபினர் வெளியேறித் தொலைந்து போகட்டும் என கொத்தலாவலை கர்ஜிக்கிருர். இதுபற்றி சலசலப்பு செய்வதில் பொருள் ஒன்றும் இல்லை எனவும் ஏளனம் பேசுகிருர்.

இவ்வளவும் கேட்டுக்கொண்டும், நடப்பவைகளை கண்டு கொண்டும் இந்தியத் தூதுவராக உள்ள தேசாய் அங்கு என்ன செய்கிருரோ தெரியவில்லை. டில்லி ஒப்பந்தம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகிற லட்சணத்தைக் கண்டு பூரிப்படைந்து, கொத்தலாவலையுடன் 'மது விருந்து' மாற்றி இன்னது செய்வது என அறியாது கொட்டம் அடித்துக் கொண்டு இருக்கிருரோ என்னமோ. யாருக்குத் தெரியும்?

உடன்படிக்கை ஏற்பட்ட உடனே, எல்லா தேசிய ஏடுகளும், பண்டிதருக்குள்ள அபார அரசியல் அறிவாற்றலை வானமளாவப் புகழ்ந்து பாராட்டின. அப்பாராட்டுதல் மை உலர்ந்து போவதற்குள்ளாகவே, அந்த ஒப்பந்தத்தின் உருப்படாதத் தன்மையை செயல் மூலம் சிலோன் பிரதமர் கொத்தலாவலை காட்டிவிட்டார். இந்திய சர்க்கார் தனது ஏமாளித்தனத்தைக் கண்டு வெட்கப்பட்டு—ஆனால் வெளிப்படாமல்—ஊமையாகிக் கிடக்கிறது. அங்கே, தமிழ் பெருங்குடி மரபினர் கண்ணீர் விட்டுக் கதறிக் கிடக்கின்றனர்.

இந்தியத் துணைக் கண்டத்திற்கு விடுதலை கிடைத்த அன்றே, சிலோனில் உள்ள தமிழ் மக்களுக்கு தாய்நாடு திரும்ப அன்பழைப்பு விட்டிருந்தால், இந்த அவதிக்கு இன்று ஆளாக வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டு இருக்காது. இனி உருவாக இருக்கிற திராவிட நாட்டின் நீங்காக் கடமை அதுவென நினைத்து, இந்திய சர்க்கார் இருந்துவிட்டது போலும்!

"சென்னை அரசியலாரையோ அல்லது தென்னாட்டு மக்களோடு தொடர்பு கொண்ட தலைவர்களையோ கலந்து கொள்ளாமல், இலங்கைப் பிரதமரும், இந்தியப் பிரதமரும் இலங்கைவாழ் திராவிட மக்கள் உரிமை பற்றி ஒரு உடன்படிக்கைக்கு வந்திருப்பது, அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் புறக்கணிப்பதாகும் என்பதோடு, ஏற்படுத்தப்பட்டிருக்கும் உடன்படிக்கையும் எட்டு லட்சம் திராவிடர்களைப் பாதிப்பதாகவும் அமைந்திருப்பதால், இந்த உடன்படிக்கையை உடனே மாற்றி, உரிய தென்னாட்டுத் தலைவர்களைக் கொண்டு, இலங்கைவாழ் திராவிடர்களின் உரிமைகள் பாதிக்கப்படாத வகையில், புதியதொரு 'உடன்படிக்கை' இலங்கை அரசியலாருடன் செய்ய முன்வர வேண்டும் என்று இந்திய அரசியலாரையும், சென்னை அரசியலாரையும்" நமது பொதுக் குழு வற்புறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளதையே நாமும் வலியுறுத்துகிறோம்.

மிளகு வாணிபத்தில் இந்தியாவின் நிலைமை

பம்பாய், மார்ச் 31—

"மிளகு வாணிபத்தில், சென்ற உலகப் போரின்போது உலகச் சந்தையில் ஒரிடத்தை இந்தியா கைப்பற்றிக் கொண்டது; இந்தப் பிடியைத் தொடர்ந்து பாதுகாத்து வருவது இந்தியாவின் பொறுப்பாகும்."

"மிளகின் விலைகளில் அடிக்கடி ஏற்றமும், இறக்கமும் ஏற்படாமல், நியாயமான விலையில் மிளகு கிடைக்கச் செய்வதற்காக மிளகைப் பொருத்த வாய்தா போக்குச் சந்தையை ஒழுங்குபடுத்த வேண்டும்."

"உலக உற்பத்தி அதிகரித்து வருவதாலும், வாங்குவோரின் சந்தை உண்டாகி வருவதை யொட்டியும், இத்துறை வாணிபத்தினை நாம் ஒழுங்குபடுத்த வேண்டியது அவசியமான தாகும்."

இவ்வாறு மிளகு, இஞ்சி வாணிபர் சங்கக் கூட்டத்தில பேசுகையில், வாய்தா போக்கு குழுவின் தலைவர் டாக்டர் பி. வி. நாராயணசாமி அவர்கள் குறிப்பிட்டார்.

இ. தே. ரா. நிதிக்கு திரட்டிய சொத்துக்கள்

சிங்கப்பூர், ஏப் 4—

ஜப்பானியர் சரணடைந்த சமயத்தில் இந்திய தேசிய இராணுவத்தினரிடமிருந்த சுமார் ரூ 10 லட்சம் மதிப்புள்ள தங்கம், தங்க நகைகள் பிற சாமான்கள் முதலியவற்றை உரியவர்களிடம் 'சொத்துப் பாராமரிப்பு' அதிகாரி கொடுத்துவிட தீர்மானித்துள்ளார்.

இந்திய தேசிய இராணுவத் திற்கு நிதி திரட்டும் பொருட்டு மேற்கூறிய தங்கம், தங்க ஆபரணங்கள் முதலியவற்றை சுபாஷ் சந்திர போஸ் திரட்டினார்.

"வறுமையையும் பிணியையும் அகற்ற விவேகமுடன் செயலாற்ற வேண்டும்"

(:)

விஞ்ஞான வாழ்க்கையில் மக்கள் கடமை பற்றி பல்கலைக் கழகத் தலைவர் பேச்சு

சென்னை, மார்ச் 31—

"மனிதன் விவேகத்துடனும், உறுதியுடனும் நடந்து கொண்டால் வறுமை, பிணி முதலியவைகளைப் பெருமளவில் அகற்றி வாழ முடியும்,"

—என்று, வாஷிங்டன் பல்கலைக் கழகத் தலைவர் டாக்டர் ஆர்தர். எச். காம்டன், சமீபத்தில் சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது :—

"நீண்ட காலமாக பல ஆண்களும், பெண்களும் பட்டினியால் கஷ்டப்பட்டு, வியாதியால் பாதிக்கப்பட்டு அகால மரணமடைந்துள்ளனர்; இது வாழ்க்கையின் தவிர்க்க முடியாத போக்கு என மக்கள் நினைக்கின்றனர்.

"ஆனால், 'வறுமையும்—பிணியும் அநாவசியம்,' என, மக்கள் வாழ்க்கை சரித்திரத்திலேயே முதலாக இப்பொழுது அறிந்து கொள்ளப்பட்டுள்ளது. ஆராய்ச்சித் துறையில் மிகப் பெரிய புது சுதந்திரமும், எல்லா மக்களுக்கும் போதுமான அளவு உணவும் சமூகத்தில் நியாயமான நோக்கமாகும்.

"விஞ்ஞானமும் தொழில் நுணுக்க அறிவும் வளர்ச்சி அடைந்திருப்பதே இத்தகைய புது சுதந்திரத்தைப் பெற வசதியளிக்கின்றது.

"ஆனால், மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு படிப்பினை இருக்கிறது. வறுமை, பிணி முதலியவைகளிலிருந்து சுதந்திரம் மேற்கத்திய நாடுகளுக்குத் தான் கிடைத்துள்ளது; ஆனால், விஞ்ஞானத்தின் மாபெரும் முன்னேற்றங்கள் எல்லா இடங்களிலும் விளங்கியுள்ளன.

"இத்தகைய சுதந்திரத்துக்கு விஞ்ஞான அறிவு மட்டும் இருந்தால் போதாது என்பது தெளிவாகிறது.

"இன்றைய விஞ்ஞான வாழ்க்கையில் முன்னேற்றமடைய நாம் என்ன செய்ய வேண்டும்? மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய விஞ்ஞான சக்திகள் பயன்பட வேண்டுமென்ருல் மற்றவர்களின் தகுதியைப் போற்றுதல், பரஸ்பரம் உதவி செய்யும் ஆற்றல் இவைகளுடன் உயர்ந்த லட்சியமும் கல்வியும் அவசியமாகும்.'

சேரமாட்டார்கள்?

கெய்ரோ, ஏப். 1—

துருக்கி—பாகிஸ்தான் ஒப்பந்தத்தில் சேரும் உத்தேசம் தங்களுக்கு இல்லையென அரபு லீக் அரசியல் கமிட்டியின் சார்பில் சவூதி அரேபியாவும் அறிவித்தது.

சோள சாகுபடி

புதுடில்லி, ஏப்ரல் 2—

கடப்பு ஆண்டில், சோள சாகுபடி விஸ்தீரணம் 4,12,56,000 ஏக்கராவும், உற்பத்தி அளவு 58 60,000 டன்னுமாக இருக்குமென்று தெரிய வருகிறது.

'ரிகாண்ட்' நதி பள்ளத்தாக்குத் திட்டம்

—: 0 :—

ரூ. 22 கோடி செலவாகும்

புதுடில்லி, ஏப்ரல் 2—

இன்று புதுடில்லியில் ரிஹாண்ட் நதிப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டத்திற்காக பண உதவி பெறும்பொருட்டு இந்திய சர்க்கார், அமெரிக்க சர்க்கார் ஆகியோர்களிடையே இந்திய—அமெரிக்க தொழில்நுட்பக் கூட்டுறவுத் திட்டத்தின்படி, ஒரு நடவடிக்கை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இந்தத் திட்டத்துக்கான முதல் கட்டம் பூர்த்தியாவதற்கு 22 கோடி ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது; அதில் 110 லட்சம் டாலர் செலவை அமெரிக்காவும் 16 69 கோடி ரூபாய் மதிப்பு செலவை இந்திய சர்க்காரும் ஏற்றுக்கொள்வார்கள். இந்த முதல் கட்டம் 1957 மார்ச் 31 தேதி பூர்த்தியடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

உத்தரப் பிரதேச சர்க்கார் 1948-ல் ஆரம்பித்த இந்த அணைக்கட்டுக்கு 75 லட்சம் ரூபாய் செலவிட்டிருக்கிருர்கள். 500 அடி உயரமும் 3,000 அடி நீளமும் உள்ள இந்த அணை மூலம் 180 சதுர மைல் பரப்புள்ள தேக்கம் ஏற்படும்; அதில் 86 லட்சம் ஏக்கரா அடி தண்ணீர் இருக்கும். முதலில் 1,20,000 கிலோவாட் சக்தியை உற்பத்தி செய்யக் கூடியதாக அமைகிற நிலையம் இறுதியில் 2 20,000 கிலோவாட் சக்தியை உற்பத்தி செய்யும்.

இந்தியத் திட்டங்களுக்கு அமெரிக்க உதவி

ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின

புதுடில்லி, ஏப். 1—

இந்தியாவின் சில திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்குமிடையே இன்று 4 ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாக தெரிகிறது.

முதலாவது ஒப்பந்தப்படி புதிதாக ஏற்படுத்தப்படும் சமுதாய அபிவிருத்தி ஸ்தலங்களுக்கு அமெரிக்கா சுமார் ரூ. 2½ கோடி தருமாம்.

தூத்துக்குடி சதி வழக்கு

எதிர் தரப்பு வாக்குமூலம்

திருநெல்வேலி, மார்ச் 31— தோழர்கள் கே. வி. கே. சாமி மற்றும் 79 பேர் மீது நடக்கும் சதி வழக்கு விசாரணையில் விசேட முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. எஸ். அரிகர அய்யர் 26—3—54ல், 6 முதல் 38 முடிய உள்ள எதிரிகளிடம் வாக்குமூலம் பெற்றார்.

33 எதிரிகளில் 19-வது, 22-வது எதிரிகள் நீங்கலாக, மற்றவர்கள், சதி நடந்தது தங்களுக்குத் தெரியாதென்றும், ரயில் நிறுத்தத்துக்குத் தொண்டர்கள் சேர்க்கப்பட்டதும் தெரியாதென்றும், தாங்கள் அவைகளில் ஈடுபடவில்லை யென்றும், தாங்கள் ரயில் நிறுத்தம் செய்யவில்லை யென்றும் வாக்குமூலம் அளித்தனர்.

19-வது எதிரி தோழர் வி. எம். நடராசன், நாகம்மாள் வாசகசாலையே கிடையாதென்றும், 14—7—53ல் இரவு வடக்கூர் பார் கிளப்பில் கூட்டம் 8-30 மணிக்கு நடந்ததென்றும், சதியாலோசனை பற்றியோ, தொண்டர்கள் சேர்த்தது பற்றியோ தனக்குத் தெரியாதென்றும், மேற்படி கூட்டத்தில் ரயிலை நிறுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டதாயும், 15-7-53 காலை ரயிலை நிறுத்த சங்கிலியைப் பிடித்துதான் இழுத்தது உண்மை யென்றும், தன்னையும் மற்றும் 4, 5 பேர்களையும் சேர்த்து கைது செய்தார்களென்றும், தி மு க. பொதுச்செயலாளர் அண்ணாதுரை அறிக்கைபடி தான் ரயிலை நிறுத்தியதாயும் வாக்குமூலம் அளித்தார்.

22-வது எதிரி தோழர் கணபதி ஆசாரி, தூத்துக்குடி வடக்கூர் பார் கிளப் கூட்டத்துக்கு தான் போயிருந்ததாயும், சதியாலோசனைப் பற்றியோ, தொண்டர்கள் சேர்த்தது பற்றியோ தனக்கு ஒன்றும் தெரியாதென்றும், சாட்சிய மெல்லாம் பொய்யென்றும், 15-7-53 காலை 6-20 மணி ரயிலில் தான் சென்று சங்கிலியைப் பிடித்து இழுத்தது உண்மை யென்றும் வாக்குமூலம் கூறினார்.

* * *

27—3—54-ந் தேதியன்றும் மாஜிஸ்திரேட் 10 எதிரிகளிடம் வாக்குமூலம் பெற்றார்.

39-வது எதிரி தோழர் விஜயரான், 14—7—53ந் தேதி இரவு நாகம்மாள் வாசகசாலையில் நடந்ததாகச் சொல்லப்படும் கூட்டத்திற்குத் தான் போகவில்லை யென்றும், சதிபற்றி தனக்கு ஒன்றும் தெரியாதென்றும், தான் பிறகுடன் 15-7-53ந் தேதி காலை தூத்துக்குடி மேலூர் இரயில்வே ஸ்டேஷனில் தண்டவாளத்தின் மேல் இருந்து இரயிலை மறித்ததாகச் சொல்லப்படுவது சுத்தப் பொய் என்றும், தான் அங்கு இருந்தே இல்லை என்றும், தன்னை முதலில் போலீசார் கைது செய்து தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தவர்களை எழுந்து போகச்சொல்வதற்காக கலெக்டர் உத்தரவுப்படி தன்னையும், நடராசனையும் விடுதலை செய்யவில்லை என்றும், தான் ஆண்டாள் தெருவுக்கு வேலை விஷயமாகப் போயிருந்ததாயும், அங்கு பெருங் கூட்டம் இருந்ததால், தான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாயும், அப்போது போலீசார் கூட்டத்தை விரட்டினார்கள் என்றும், அப்போது தனக்குக் காயம் ஏற்பட்டதாயும் வாக்குமூலம் அளித்தார்.

40-வது எதிரி தோழர் வெங்கடாசலம் தனது வாக்குமூலத்தில் சதி நடந்தது பற்றி தனக்கு ஒன்றும்தெரியாதென்றும், தான் தண்டவாளத்தில் உட்கார்ந்திருக்கவில்லை யென்றும், தள்ளி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாயும், தன்னைப் போலீசார் கைது செய்தார்களென்றும் கூறினார்.

41-வது எதிரி தோழர் சுப்பையா, சதி பற்றி தனக்கு ஒன்றும் தெரியாதென்றும், தான் இரயில் தண்டவாளத்தில் உட்கார்ந்திருக்கவில்லை யென்றும், கூட்டம் இருந்ததை, தான் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தபோது கூட்டத்தைப் போலீசார் விரட்டினார்களென்றும், அப்போது தான் அடிபட்டுக் கீழே விழுந்ததாயும் தன்னை போலீசார் மருத்துவச் சாலைக்குத் தூக்கிச் சென்றார்களென்றும் வாக்குமூலத்தில் கூறினார்.

42-வது எதிரி தோழர் திருமால் அளித்த வாக்குமூலத்தில் சதி பற்றி தனக்கு ஒன்றும் தெரியாதென்றும், சர்க்கார் தரப்பில் அளிக்கப்பட்ட சாட்சியம் பொய்யானதென்றும், தான் தண்டவாளத்தின் மேல் உட்கார்ந்திருக்கவில்லையென்றும், தன் பாட்டியை ஆண்டாள் தெரு வழியாக கூட்டிச் சென்றபோது போலீசார் தன்னை அடித்ததாயும் கூறினார்.

43-வது எதிரி தோழர் எம். சந்திராஜதான் 14—7—53-ந் தேதி இரவு 1-30 மணி வரை ஆலையில் வேலை பார்த்ததாயும், தனக்கு நாகம்மாள் வாசகசாலையில் நடந்தது ஒன்றும் தெரியாதென்றும், தான் தண்டவாளத்தின் மேல் உட்கார்ந்தது கிடையாதென்றும், 15—7—53-ந் தேதி காலை நிகழ்ச்சி பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாதென்றும், சாட்சிகள் பொய்யுரை அளித்திருப்பதாயும் தனது வாக்குமூலத்தில் கூறினார்.

45, 46, 48, 53, 54-வது எதிரிகள் முறையே தோழர்கள் பிச்சைய நாடார், சண்முகக்கனி நாடார், இராமசாமி நாடார், முத்தையாக் கோனார், பொன்னுச்சாமி நாடார் ஆகியவர்கள் தங்களுக்கு ஒன்றும் தெரியாதென்றும் அரசாங்கத் தரப்பில் பொய் சாட்சியங்கள் அளிக்கப்பட்டிருப்பதாயும் வாக்குமூலங்கள் அளித்தனர்.

46-வது எதிரி தோழர் சண்முகக் கனி நாடார், தான், புதுக்கிராமத்தில், பிராசிகியூஷன் தரப்பு 49-வது சாட்சியான கிருஷ்ண ஆச்சாரியின் கடை முன்பு நின்று, கடையை மூடும்படி அவரை வற்புறுத்தியதாகச் சாட்சியம் கூறியது பொய்யென்றும், அன்றையதினம் தான், உடல்நலக் குறைவாய் இருந்ததாயும் கூறினார்.

• • •

ஜாமீனில் விடுதலை மறுப்பு

54, 74, 77, 78, 79, 88 வது எதிரிகளான முறையே தோழர்கள் பொன்னுசாமி நாடார், சிவணைந்த பெருமாள் நாடார், சுப்பையா நாடார், வேலுசாமி நாடார், சண்முகய்யா, முனியாண்டி ஆகியவர்களை ஜாமீனில் விடுதலை செய்யக் கோரி கொடுக்கப்பட்டிருந்த மனுவை மாஜிஸ்திரேட் விசாரித்து அவர்களை ஜாமீனில் விடுதலை செய்ய மறுத்து விட்டார்.

உங்களுக்குத் தெரியுமா?

கேள்விகள் :

1. சமுதாய அபிவிருத்தித் திட்டங்களின் பிரதான லட்சியம் என்ன ?
   (அ) விவசாயத் துறையில், இப்பொழுது கையாளப்பட்டு வரும் முறைகளைக் காட்டிலும் மேலான முறைகளை விவசாயிகள் மேற்கொள்ளும்படிச் செய்வது.
   (ஆ) ஐந்து ஆண்டுத் திட்டத்துக்கு கிராமவாசிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காக அவர்களுக்குப் பணம் கொடுப்பது.
   (இ) மக்களின் சுய உழைப்பின் மூலம் கிராம வாழ்க்கையைச் சீரமைப்பது.
2. 1954 ஜனவரி இறுதியில் இருந்த இந்தியாவின் ஸ்டேர்லிங் நிலுவைகள் :
   (அ) சுமார் 735 கோடி ரூபாய்
   (ஆ) சுமார் 710 கோடி ரூபாய்
   (இ) சுமார் 820 கோடி ரூபாய்
3. ஐந்து ஆண்டுத் திட்டத்தில் எந்த வேலைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது ?
   (அ) விவசாயமும், கிராமாந்தர அபிவிருத்தியும்;
   (ஆ) பெரிய பாசனத் திட்டங்கள், மின்சாரத் திட்டங்கள்;
   (இ) தொழில்கள்.
4. பிரதம மந்திரி நேரு சமீபத்தில் அஸ்திவாரக் கல் நாட்டிய திட்டம் எது ?
   (அ) சம்பால் அணைத் திட்டம்;
   (ஆ) கோய்னு அணைத் திட்டம்;
   (இ) கோசி அணைத் திட்டம்.
5. ரசாயன மணல் தொழிற்சாலை எந்த இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது ?
   (அ) ஆலவாய் (திருவாங்கூர்-கொச்சி);
   (ஆ) பங்களூர (மைசூர்)
   (இ) ஔரங்காபாத் (ஹைதராபாத்).

விடைகள் :

1—(இ); 2—(அ); 3—(அ); 4—(அ); 5—(அ).

லண்டன், மார்ச் 31— அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் சேரும் பிரச்னையைப் பரிசீலனை செய்ய ருஷ்யா சம்மதித்திருப்பதாக பிரெஞ்சு அயல்நாட்டு இலாகா அலுவலகம் கூறுகிறது.

சென்னைமின்சாரதிட்டங்கள்

5-ஆண்டு திட்டத்தில் சேர்க்க சென்னை தூதுக் குழுவினர் வற்புறுத்தல்

திட்டத்தை நிறைவேற்ருவிடில் ஏற்படும் சிக்கல்களைச் சுட்டிக் காட்டினர்

புதுடில்லி, ஏப். 1— சென்னை மாநிலத்தின் சில மின்சாரத் திட்டங்களை முதல் 5 ஆண்டு திட்டத்திலேயே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சென்னையைச் சேர்ந்த 16 பார்லிமெண்டு அங்கத்தினர்கள் நீர்ப்பாசன, மின்சார மந்திரி நந்தாவைச் சந்தித்து வற்புறுத்தினர்.

பிரஸ்தாப மின்சாரத் திட்டங்கள் சம்பந்தமாக அவசரமாக ஏதாவது செய்வது அவசியமே என மந்திரியும் கருதுவதாகத் தெரிகிறது.

அவர்கள் சமர்ப்பித்த மனுவில், மின்சாரத் திட்டங்கள் சம்பந்தப்பட்ட வரையில், கடந்த 10 ஆண்டு காலமாக சென்னை மாநிலத்தில் மின்சாரப் பற்றாக்குறை இருந்து வந்துள்ளதென்றும், எனவே, தாங்கள் குறிப்பிடும் திட்டங்களை எவ்விதத் தாமதமுமின்றி அமுல் செய்வது இன்றியமையாததென்றும் வற்புறுத்தியுள்ளனர்.

இல்லாவிடில் தொழில் நிலையங்களில் மின்சார பற்றாக்குறை காரணமாக சொல்லொணுத் துன்பம் உண்டாகும் என்றும், பெருமளவுக்கு. வேலையின்மையும், வேலை போதாமையும் ஏற்படலாமென்றும், அதன் விளைவாகத் தொழிலாளர்களிடையே கடும் அதிருப்தி ஏற்படுமென்று மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

'நல்வாய்ப்பை அடிமைத்தனத்திற்கு மாற்றிக்கொள்ளமாட்டோம்'

'இந்தியாவுடன் இணைவதானல் கி. பாகிஸ்தான் கடலில் ஒரு துளியாகும்'

மே. பாக். குற்றச்சாட்டிற்கு சுகாவர்த்தியின் பதில்

கராச்சி, ஏப்ரல் 2— "கிழக்கு வங்கத்தில் உள்ள இந்துக்கள் எங்களுடன் ஒத்துழைப்பதானுல், அவர்களைக் கண்டிப்பாக அமைச்சர் குழுவில் ஏற்றுக்கொள்ளுவோம்."

—இவ்வாறு கிழக்கு பாகிஸ்தானில் முஸ்லீம் லீகை முறியடித்து தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றுள்ள கூட்டு முன்னணியின் தலைவரான எச். எஸ். சுகாவர்த்தி குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:—

மேற்கு பாகிஸ்தான் அமைச்சர் குழுவில் தற்சமயம் சிறுபான்மை வகுப்பினர் எவரும் அமைச்சராக இருக்கவில்லை.

மேற்கு பாகிஸ்தானில் அதிகமாக இந்துக்கள் இல்லை; ஆனால் கிழக்குப் பாகிஸ்தானிலோ மொத்த மக்கள் தொகையில் 25 சதவிகிதத்தினர் இந்துக்களாக உள்ளனர்.

"கிழக்கு பாகிஸ்தான் துண்டித்துக் கொள்வதற்கான" இயக்கமொன்று மேற்கு பாகிஸ்தானில் இயங்கி வருவது தனக்கு வேதனை தருவதாக அவர் அறிவித்தார்.

மேற்கு பாகிஸ்தானில் நல்லபுத்தி பிறக்கிற வரையில், அவ்வியக்கத்தை எதிர்த்து போரிடப் போவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

"தேர்தலில் வெற்றி கண்டுள்ள கூட்டு முன்னணி இந்தியாவுடன் இணைய முயற்சிக்கிறது என்று மேற்கு பாகிஸ்தானில் குறைகூறப்படுகிறது. இக்குற்றச் சாட்டு வெறும் கேலிக்கூத்து கிழக்கு பாகிஸ்தானுக்கு தற்சமயம் உள்ள சாதகமான நல்வாய்ப்பை இந்தியாவுடன் இணையும் அடிமைத்தனத்துக்காக மாற்றிக் கொள்ள முடியுமா?" என சுகாவர்த்தி கேட்டார்.

மொத்த பாகிஸ்தான் மக்கள் தொகையில், கிழக்குப் பாகிஸ்தானில் மட்டும் 56 சதவிகித மக்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில் கி. பாகிஸ்தான் இந்தியாவுடன் இணைந்துவிட்டால், அது கடல் கலந்துள்ள ஒரு துளி போலவே இருக்கும். டாக்காவிற்கு சென்று 75 தினங்களுக்குள் கராச்சிக்குத் திரும்பி வந்து, ஆட்சிப் பொறுப்பில் உள்ள லீக் கட்சியை ஒழித்துக் கட்டுவதற்கான ஒரு மக்கள் இயக்கத்தை உருவாக்கப் போவதாக அறிவித்தார் அவர். இப்பொழுது காணப்படும் மாநிலப் பித்துக்கு எதிராக தேசிய ஒற்றுமையை வளர்க்கவே தாம் கராச்சியில் பாடுபட இருப்பதாகவும் அவர் கூறினார்.

தாழ்த்தப்பட்டோர் தொகையைக் குறைத்துக் கணக்கிட்டதேன்?

அவர்கள் பிரதிநிதி எண்ணிக்கையைக் குறைக்கவே இந்த சூழ்ச்சி

தனித் தொகுதிகள் குறைப்பு பற்றி தோழர் ஏ. ரத்தினம் (தலைவர் தாழ்த்தப் பட்டோர் சம்மேளனம்) எம். எல். ஏ., அவர்கள் கூறியதாவது :—

சென்னை ராஜ்யத்தில் மக்கள் தொகை அதிகரிப்புக் கிணங்க, தொகுதிகள் அதிகரிக்கப்பட்டிருக்கும்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கான 'ரிசர்வ்' தொகுதிகள் குறைக்கப்பட்டிருப்பதைக் காண நான் ஆச்சரியப்படுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை வேண்டுமென்றே குறைத்துக் காட்டப்பட்டிருக்கிறது. உதாரணமாக 14,16 056 மக்கள் தொகை உள்ள சென்னை நகரத்தில் 5 லட்சம் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஆனால் தொகுதிகளின் பட்டியலில், 5 லட்சத்திற்குப் பதிலாக 1,63,698 என்று காட்டப்பட்டுள்ளது. சென்னை நகரில் மட்டும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 4 'ரிசர்வ்' இடங்கள் தரப்படவேண்டியதற்கு ஒரே ஒரு இடம் மட்டும் 'ரிசர்வ்' செய்யப்பட்டுள்ளது. சென்னை நகரத்திற்கு, மக்கள் சபைக்கு இரண்டு ஸ்தானங்கள் உள்ளன. ஆனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒன்று கூட 'ரிசர்வ்' செய்யப்படவில்லை. சர்க்கார் அதிகாரிகள் தவறான புள்ளி விவரங்களை தருவதின் மூலம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பெரும் அநீதியை இழைக்கிறார்கள். சென்னை மாநிலத்திலுள்ள இதர மாவட்டங்களில் வசிக்கும், பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு 'தனித் தொகுதி' நிர்ணயிப்பதில் இதே அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன்.

சென்னை மாநிலத்தில் கடந்த பொதுத் தேர்தலின்போது 43 'தனித் தொகுதிகள்' பிற்பட்ட வகுப்பினருக்காக இருந்தது. ஆனால் 1957—58ல் நடைபெற இருக்கும் தேர்தலில் 39 இடங்களே தரப்பட்டுள்ளன.

தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கையை 1948ல் இருந்ததைக் காட்டிலும் 1951ல் குறைவாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். 1951ம் வருடத்திய 'சென்சஸ்' மக்கள் தொகை என்று தேர்தல் தொகுதி பட்டியலில் காட்டப்பட்டிருக்கும் மக்கள் தொகையின் எண்ணிக்கை தவறுனதும், ஆதாரமற்றதுமாகும்.

இந்த முறையில் சர்க்கார் அதிகாரிகளின் செய்கையை நான் கண்டிப்பதுடன், தாழ்த்தப்பட்ட மக்களுடைய எண்ணிக்கையை மீண்டும் சரிபார்க்கவேண்டுமென சர்க்காரை கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்றுக்கொள்ள மறுத்தனர்!

வாஷிங்டன், ஏப். 1— வட அட்லாண்டிக் இராணுவ ஒப்பந்தத்தில் சேர ருஷ்யா தயார் என்று தெரிவித்த யோசனையை அமெரிக்கா ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது.

நடப்பு ஆண்டில், ஆமணக்கு விதை சாகுபடி விஸ்தீரணம் 18,68,000 ஏக்கராவும், உற்பத்தி 1,07,000 டன்னுமாக இருக்கு மென்று தெரியவருகிறது.

இலங்கை......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஹைகமிஷனருக்கு மனு செய்த உடனேயே அவர்கள் இந்தியக் குடிமகனாகப் பதிவு செய்து கொள்ள கோரப்படுவர்.

கண்டியில் உள்ள இந்திய ஏஜெண்டின் காரியாலயமும் கொழும்புக்கு மாற்றப்படும். எஸ்டேட் தொழிலாளர் செய்யும் முடிவுகள் முழு அர்த்தத்தையும் அவர்கள் தெரிந்துகொள்ள இது உதவும்.

எஸ்டேட் தொழிலாளர்கள் அல்லாதவர்களுக்கு இந்திய ஹைகமிஷனர் $1\frac{1}{2}$ லட்சம் 'பாஸ்'களை வழங்கியிருந்தபோதிலும், ஒவ்வொரு 'பாஸ்'ம் ஒரு தனி நபரைக் குறிப்பதாகக் கருதுவது தவறு; இவற்றில் பெரும்பாலானவை புதுப்பிக்கப்பட்ட 'பாஸ்'களாகும். சட்டப்படி எல்லா யோக்கியதாம்சங்களும் உள்ள இத்தகைய நபர்கள் எத்தனை பேர் இலங்கை குடி மகனுரிமைக்கு மனுச் செய்து கொண்டிருக்கின்றனர் என்று இன்னும் பரிசீலிக்கப்படவில்லை. இந்தோ-இலங்கை 'பாஸ்' வைத்திருப்பவர்கள் இந்தியக் குடிமகனாகிவிட்டதாகப் பார்வையாளர்கள் கருதுவது முற்றிலும் சரியானதல்ல; சில ஆண்டுகளாகக் குடிமகனுக்கும் உரிமை மனுக்கள் பைசலாகாமல் கிடக்கின்றன."

★

கபட நாடகம்

கொழும்பு, ஏப். 2—

இலங்கையிலுள்ள அன்னிய நாட்டினர் 15,000 பேர்களின் தற்காலிக வாச அனுமதிச் சீட்டு ஏற்கெனவேயே காலாவதியாகிவிட்டதாக குடியேற்ற அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனராம்!

அப்படி காலாவதியான 'பர்மிட்' வைத்திருப்பவர்கள், சட்ட விரோதமாகத் தீவில் வசிப்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால், அவர்கள் 'வெளியேற்றத் தக்கவர்களாவார்கள்' என்று கூறப்படுகிறது.

இதில் 2,000 பேர்கள்தான் பர்மிட்டைப் புதுப்பிக்குமாறு மனுச் செய்திருப்பதாக அறியப்படுகிறது.

வாச பர்மிட் காலாவதியான பின் தலைமறைவாகப் போனால் அதைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டம் என போலீசார் அபிப்பிராயப்படுகின்றனர்.

பொதுமக்களும், முதலாளிகளும் ஒத்துழைக்காவிடில் இவர்களைக் கண்டுபிடிப்பதே கஷ்டம் என நினைக்கின்றனர். புதிதாக வேலைக்கு வைக்குமுன் தொழிலாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை நன்கு கவனிக்குமாறு முதலாளிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

மறைவு

கும்பகோணம், ஏப் 3—

"எனது மூத்த தமையனார் கே. கே. சோமசுந்தரம் அவர்கள் (வயது 60) 28—3—54 இரவு 12 மணிக்கு நாகப்பட்டணத்தில் இயற்கை எய்தினார்; 29-3 54 இரவு 7 மணிக்கு உடல் அடக்கம் செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்," என்று தோழர் கே. கே. நீலமேகம் அறிவிக்கிறார்.

தாளமுத்து — நடராசன் நினைவுப் படிப்பகம்

முதல் ஆண்டு விழா

பரவை, ஏப். 3—

4—4—54 மாலை 6-30 மணிக்கு பரவை அண்ணா திடலில், தோழர் சி. சுப்பமணி தலைமையில், விழா நடைபெறும். தோழர்கள் இளமுருகு, இரா. சந்திரன், தோழியர் சோற் செல்வி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

விடுமுறையிலுள்ள ......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விலக்குகளை ஏப். 19-ந் தேதி முதற்கொண்டு ரத்து செய்துவிட இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

இந்தத் தேதியிலிருந்து, பிரெஞ்சுக் குடியேற்றப் பிரதேசங்களிலுள்ளவர்கள் இந்தியப் பிரதேச வழியாகத் தாண்டிச் செல்வதற்கோ, அல்லது இந்தியாவிற்குள் வருவதற்கோ விரும்பினால், புதுச்சேரியிலுள்ள இந்திய கான்சல்—ஜெனரல் வழங்கும் அனுமதிச் சீட்டுகளை வைத்திருக்கவேண்டும். அவ்வாறு இல்லாதவர்கள் இந்தியப் பிரதேசத்திற்குள் வரமுடியாது.

திருத்தம்

2—4—54 'நம் நாடு' இதழின் தலையங்கத்தில், இரண்டாவது கலத்தில், 37-வது வரியில் "கடைசியாக, நிதி மந்திரியாருக்கு, இந்தக் கதி—98 - 41" என்ற வார்த்தையின் இறுதியிலுள்ள எண்ணிக்கையை, "93 - 41" என்று திருத்தி வாசிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். (ஆ-ர்.)

சட்ட சபையில் குழப்பமும் கூச்சலும்!

— (:) —

உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் வசைபாடிக் கொண்டனர்

— (:) —

'வாயை மூடு' என அமைச்சர் அலறல்!

கல்கத்தா, ஏப் 2—

மேற்கு வங்க நகரசபை திருத்த மசோதா ஒன்றை, சட்டசபை விவாதிக்க எடுத்துக் கொண்டது. மொத்தம் 250 திருத்தங்கள் மசோதாவிற்குக் கொடுக்கப்பட்டுள்ளன. திருத்தங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டி இருப்பதால், மசோதா அடுத்த சபை கூட்டத்தில் கொண்டு வரப்படுமென, முதல் முறையாக சட்டசபையில் மசோதா நிறைவேறிய பிறகு நகராட்சி மந்திரி ஜலான் அறிவித்தார்.

மந்திரி ஜலான் பேச்சு முழுதும், அடிக்கடி எதிர்க் கட்சியினரால் இடைமறிக்கப்பட்டது. அதற்கு, காங்கிரஸ் உறுப்பினர்கள் பதில் நடவடிக்கையும் எடுத்துக் கொண்டனர். ஒரு சமயம் ஆத்திரம் தாங்க முடியாமல், 'வாயை மூடு' என்று அமைச்சரே அலறிவிட்டார்.

இந்தச் சொல் அமைச்சர் வாயிலிருந்து கிளம்பியதும், எதிர் கட்சி உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்னை மீது எதிர்ப்புக் கூச்சல் கிளப்பினர். சிறிது நேரம் சபையில் ஒரே குழப்பம் நிலவியிருந்தது. இதற்குள்ளாக அமைச்சர் தனது இழி சொல்லை 'வாபஸ்' பெற்றுக் கொண்டார்.

கொஞ்ச நேரத்திற்குப் பின்னர் காங்கிரஸ் தொழிற் சங்க உறுப்பினரான தயாராம் பெரி என்பவர் ஏதோ கூச்சலிட்டார்; இது கேட்ட எதிர்க் கட்சி உறுப்பினரான ராதா கிருஷ்ண பால் என்பவர் ஆத்திரம் தாங்க முடியாமல், ஆட்டம் கண்ட உடலோடு கூச்சலிட்டார்.

சபைத் தலைவர் நடந்தது என்ன என பெரியைக் கேட்டார். தன்னை ஒரு 'தலால்' என பால் கூறினதாகக் குறிப்பிட்டதோடு, பால் தகப்பனாரும் ஒரு 'தலால்' எனத் தான் திரும்ப ஏசினதாகவும் கூறினர். அச்சொல்லை வாபஸ் வாங்கும்படி பெரிக்கு தலைவர் கட்டளையிட்டார். பால் வாபஸ் வாங்கிக் கொண்டால் தானும் வாபஸ் பெற்றுக் கொள்வதாக அவர் கூறினர். தான் ஒன்றும் அவ்வாறு கூறவில்லை என பால் மறுத்துவிட்டார்.

தஞ்சை மாவட்ட 2-வது தி. மு. கழக மாநாடு

"ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த தோழர்கள் தங்கள் பெயரையும், விலாசத்தையும் உடனடியாக, 'செயலாளர், வரவேற்புக் குழு, தி. மு. க. இரண்டாவது மாநாடு, தஞ்சை,' என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

"நகரக் கிளை, சிற்றூர்க் கிளைச் செயலாளர்கள் உடனடியாக அவைகளைச் சேகரித்தனுப்ப வேண்டுகிறோம்," என, வரவேற்புக் குழுவினர் அறிவிக்கிறார்கள்.

உருளைக்கிழங்கு வர்த்தகர் சங்க மாநாடு

5—4—'54 திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு சென்னை செயின்ட்மேரீஸ் மண்டபத்தில், உருளைக் கிழங்கு வர்த்தகர் சங்க சார்பில், உருளைக் கிழங்குக்கு விற்பனை வரி விலக்களிக்கக்கோரும் மாநாடு திரு. பி. டி. ராஜன், எம். எல். ஏ. தலைமையில் நடைபெறும். டாக்டர் வி. கே. ஜான் எம்.எல்.சி., கே. விநாயகம், எம்.எல்.ஏ., கே. டி. கோசல்ராம் எம்.எல்.ஏ., என். தெய்வசிகாமணி, எம். எல். ஏ.; எஸ். எம். வின்செண்ட், டாக்டர் பி. அழகசிங்காரிசாமி எம்.சி., டாக்டர் தேவி. சாமி, எம். பி. பி.எஸ்., எம். சி., என். நடேச முதலியார், பி. கமலாபதி, பி. சுமசிவாயமூர்த்தி, எம்.சி., மற்றும் பலர் பேசுவர்.

காங்கிரஸ் அமைச்சர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

பாரபட்சமாக நடந்ததாகக் குற்றச்சாட்டு

ரீவா, ஏப். 2—

விந்திய பிரதேச காங்கிரஸ் அமைச்சர் குழுவில் நிதி அமைச்சராக இருந்துவரும் கோபால் சரண்சிங் மீது, பாரபட்சமாக நடந்துகொண்டதாகக் குற்றம் கூறி, எதிர்க் கட்சித் தலைவரால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று சட்ட சபையில் கொண்டு வரப்பட்டது.

மார்ச் 25-ந் தேதி கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை சபைத் தலைவர் ஒப்புக்கொண்டு, சபையின் சிறப்புக் கூட்டத்தை இத்திங்கள் 5-ந் தேதிக்கு கூட்ட கட்டளையிட்டிருக்கிறார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் அக்கூட்டத்தில் விவாதித்து முடிவு செய்யப்படும்.

'சொந்த வீட்டைப் பூட்டினால் அண்டை வீட்டுக்காரன் அவமானப்படுவானேன்?'

—:0:—

பாக்கிஸ்தான் பிரதமர் முகமதலி வியாக்கியானம்!

கொழும்பு, ஏப்ரல் 2—

காஷ்மீர் தகராறில் எந்த ஆசிய நாட்டின் மத்தியஸ்தத்தையும் ஏற்கத் தாம் தயாராயிருப்பதாகவும், இந்தியா ஒப்புக்கொண்டால், கொழும்பு மாநாட்டில் காஷ்மீர் பிரச்னை பற்றி பேசுவதற்குத் தாம் தயாராயிருப்பதாகவும், பாக் பிரதமர் முகமதலி பத்திரிகை நிருபரொருவரின் பேட்டியின்போது கூறியுள்ளார்.

பாக்—அமெரிக்கா இராணுவ ஒப்பந்தத்தைப் பற்றி அவர் குறிப்பிடுகையில், கொழும்பு மாநாட்டில் அதைப் பற்றி விவாதிக்க முடியாதென்றார்; "ஒருவன், தன் சொந்த வீட்டைப் பூட்டிக் கொண்டால், அண்டை வீட்டுக்காரன், தான், அவமானப் படுத்தப் பட்டதாக நினைக்கக் கூடாது," என்றார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தஞ்சை மாவட்ட இரண்டாவது திராவிட முன்னேற்றக் கழக

சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

தஞ்சையில் A. Y. அருளானந்தசாமி நாடார் தோட்டத்தில் அமைத்துள்ள பன்னீர்ச்செல்வம் பந்தலில் — அழகிரி அரங்கில் 10, 11—4—54-ந் தேதிகளில் நடைபெறும்

10—4—54 சனி:	11—4—54 ஞாயிறு:
சமூக சீர்திருத்த மாநாடு	**அரசியல் மாநாடு**
தலைவர்: ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.	தலைவர்: என். வி. நடராசன்
துவக்குபவர்: க. அன்பழகன்	துவக்குபவர்: ஈ. வெ. கி. சம்பத்

இரு நாட்களிலும்—தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், மு. கருணாநிதி, சி. பி. சிற்றரசு, கி. மனோகரன், அ. பொன்னம்பலனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். எஸ். இளங்கோ, ஏ. கே. வேலன், தில்லை வில்லாளன், எஸ். சுயம்பிரகாசம், எம். எல். ஏ., கே. ஆர். சம்பந்தம், எம். எல். ஏ., எம். பி. சுப்பிரமணியம், எம். எல். ஏ., வேலு, எம். எல். ஏ., பழனியாண்டி, எம். எல். ஏ., எஸ். பி. தங்கவேலு, எம். எல். ஏ., தோழியர்கள் இராமாமிர்தத்தம்மையார், சத்தியவாணிமுத்து ஆகியோர் கலந்துகொள்வார்கள்

சி. எஸ். ஜெயராமன், நாகூர் அனீபா, கே. ஆர். செல்லமுத்து இசை நிகழ்ச்சிகள் இரு நாட்களிலும் நடைபெறும்

★

இரு நாட்களிலும் கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும் நாடகங்கள்

10—4—54 சனி இரவு:	11—4—54 ஞாயிறு இரவு:
"காதல் ஜோதி"	"ஓர் இரவு"

இரு நாட்களுக்கும் அனுமதி விவரம்:—(நாடகங்கள் உட்பட)

வரவேற்பாளர் ரூ. 5, பிரதிநிதி ரூ. 2, பார்வையாளர் ரூ. 1. பெண்களுக்கு அ. 8

குறிப்பு:—உணவுக்குத் தனிக் கட்டணம் இரு நாட்களுக்கும் ரூ. 2—8—0

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தோழர் நெடுஞ்செழியன் சுற்றுப் பயணம்

★

ஏப்ரல்

4: நன்பகல் வண்டிப் பெரியார் (திரு-கொச்சி)

,, மாலை கம்பம்

5: சோழவந்தான்

6: அய்யம்பேட்டை

7: சென்னை

9: கடலூர்

10: காலை தஞ்சை

,, மாலை பொன்மலை

11: தஞ்சை

12: திருவெண்காடு

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குள்ளநாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.